<u>2026 ஆகஸ்ட் மாதம் 25– ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 32/2021</u>

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25– ஆம் தேதி செவ்வாய்கிழமை திரு.P.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW20 (LW26) – சுதாகரன் |
| தகப்பனார் பெயர்: | தங்கவேல் |
| ஊர்: | வருஷநாடு |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், வருஷநாடு காவல்நிலையம் |
| வயது : | 36 |

25.08.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். 3, 4, 5, 6, 7, 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், வருஷநாடு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 29.02.2020ம் தேதி கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியிலிருந்தபோது, காவல் ஆய்வாளர் உத்தரவின்படி கடமலைக்குண்டு காவல்நிலைய குற்ற எண்.50/2020 Manmissing வழக்கில்

கொலையுண்டு இறந்துபோன செல்லப்பாண்டி என்பவரின் பிரேத்ததினை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி வர வேண்டி இராமநாதபுரம், ரெகுநாதபுரம், சேதுக்கரை கடற்கரையில் புதைக்கப்பட்டிருந்த இடத்தில் வட்டாட்சியர் முன்னிலையில், ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் தோண்டி எடுக்கப்பட்ட இறந்துபோன செல்லப்பாண்டியின் அழுகிய சதையுடன்கூடிய எலும்பு கூடுகளுடன் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன்.

2. அதன்மேல் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சேகரித்து வைக்கப்பட்ட செல்லப்பாண்டியின் தொடை எலும்பை பெற்று, மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு 03.09.2020ம் தேதி ஒப்படைத்தேன். அதன்மேல் இறந்துபோன செல்லப்பாண்டியின் மகன் மற்றும் மனைவி இருவரின் இரத்த மாதிரிகளை சேகரிக்க க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ஆஜர் செய்து, இரத்த மாதிரி சேகாரம் செய்யப்பட்டு, கனம் ஆண்டிபட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவின்பேரில் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் 16.09.2020ம் தேதி ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. இராமநாதபுரம் மருத்துவமனையில் இருந்து தொடை எலும்பு யாரிடமிருந்து பெறப்பட்டது என்றால் மருத்துவர் திரு.சுல்தான் சாகுல் ஹமீது என்பவரிடமிருந்து பெறப்பட்டது. அந்த தொடை எலும்பை எங்கு கொடுத்தேன் என்றால் மதுரை வட்டார தடய அறிவியல் துறைக்கு கொடுத்தேன். மதுரை வட்டார தடய அறிவியல் துறைக்கு கொடுப்பதற்கு முன்பு ஆய்வாளர் என்னிடம் வழக்கு சரித்திரம் மற்றும் வேண்டுகோள் கடிதம், கடவுச்சீட்டு கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை.

4. க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரத்தம் எடுத்தப்போது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். இரத்தம் எடுத்த அங்க அடையாளங்களை மருத்துவர் குறித்துக் கொண்டாரா என்றால் குறித்து கொண்டார். எந்த தேதியில் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் 16.09.2020 ம் தேதியாகும். தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக்கூடு செல்லப்பாண்டியின் எலும்புக்கூடு என்பதற்கு எந்த அடையாளமும் இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சித்ரா மற்றும் நந்தீஷ்குமார் ஆகியோர்களை இரத்த பரிசோதனைக்கு அழைத்து செல்லவில்லை என்றாலும், தோண்டி எடுத்த இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல.

<u>3 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

5. செல்லப்பாண்டியின் உடன்பிறந்த சகோதரி ஈஸ்வரி மற்றும் மகன் நந்தீஷ்குமாரின் இரத்த மாதிரிகளை சேகரிக்க உத்தரவிடப்பட்டு, சேகரிக்கப்பட்டது என்றால் சரிதான். 03.03.2020 ம் தேதி இரத்த மாதிரி சேகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல, ஒரு வாரம் பின்னிட்டு மாதிரிகள் எடுக்கப்பட்டது, அந்த விண்ணப்பம் **எ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>மறு விசாரணை</u> :- இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.08.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.25 18:29:02 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.08.2026